17.04.2025

O.S.No.313/2017

வா.சா.2.திரு.கருப்பையா த.பெ.மூக்கன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல்** விசாரணை

நான் இந்த வழக்கில் எனக்கு வரப்பெற்ற அழைப்பாணையை பெற்று கொண்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் எ.கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். மேற்படி கிராமம் அட்டப்பட்டி தாய் கிராமத்தை சேர்ந்தது. எனது தந்தை பெயர் மூக்கன். எனது தந்தையின் தந்தை பெயர் வழக்கன். எங்கள் பூர்வீகமே எ.கோவில்பட்டி தான். நான் பிறந்தது முதல் அங்கு தான் குடியிருந்து வருகிறேன். அழகம்மாள் சொத்து சம்மந்தமாக சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வந்தது. அந்த சொத்தின் சர்வே எண்.379/9சி1ஏ ஆகும். அதன் நான்குமால் வடக்கே கண்ணாத்தாள், கிழக்கே கண்மாய் புறம்போக்கு, தெற்கே எனது தந்தை அழகம்மாளிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்து, மேற்கே கண்ணாயி என்பவரது சொத்து உள்ளன. தெற்கு மாலில் எனது தந்தை அழகம்மாளிடமிருந்து 15 செண்ட நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். அந்த 15 செண்டை இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் வெவ்வேறு தேதிகளில் கிரையம் வாங்கியுள்ளார். எனது தந்தை கிரையம் பெற்ற தெற்குமாலில் உள்ள 15 செண்டிற்கு தென்புறம் எனது தந்தை கண்ணாயி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். கண்ணாயியும், அழகம்மாளும் உடன்பிறந்த சகோதரிகள். எனது தந்தை தாவா சொத்தில் தெற்குமாலில் அழகம்மாளிடமிருந்து கிரையம் பெற்ற 15 செண்ட் நிலத்திற்கு வடக்கு பக்கம் உள்ள நிலத்தை அழகம்மாள் அனுபவம் செய்து வருகிறார். அந்த சொத்து சுமார் 16 செண்ட இருக்கும்.

2. எனது தந்தை கிரையம் பெற்ற 15 செண்ட நிலத்தில் எனது தந்தையும், அதற்கு வடக்கு பக்கம் உள்ள 16 செண்டில் அழகம்மாளையும் தவிர வேறு யாரும் அந்த சொத்துகளை அனுபவித்து வரவில்லை. அழகம்மாள் இறந்துபோனார். தாவா சொத்தில் மூக்கம்மாள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார். அந்த வீடு இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. மூக்கம்மாள் அந்த சொத்தை கிரையம் பெற்றுள்ளாரா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அருகே கீழையூரை சேர்ந்த அழகப்பன் மகன் அழகப்பனுக்கு சொத்து எதுவும் கிடையாது.

**(குறுக்கு விசாரணை** தொடர்ச்சிக்காக **வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது)**